DINATHANTHI

25 AUG 2022

PAGE 12

### பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில்

# மாணவர் சேர்க்கைக்கு காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, ஆக. 25-

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

லாஸ்பேட்டையில் பல்கலைக்கழக சமுதாய கல்லூரி உள்ளது. இந்த கல்வியாண்டில் இளங்கலை, முதுநிலை பட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த ஜூலை மாதம் 25-ந் தேதி முதல் நேற்று வரை *https;//pucc.edu.in* என்ற இணையத்தில் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. விண்ணப்பிக்க கடைசி தேதி நேற்றுடன் முடிவடைந்த நிலையில் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று விண்ணப்பிக்க காலக்கெடு அடுத்த மாதம் (செப்டம்பர்) 1-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு சமுதாயக்கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

25 AUG 2022

PAGE 16

# பல்கலை சமுதாய கல்லூரியில் மாணவர் சேர்க்கை செப். 1ம் தேதி வரை நீட்டிப்பு

புதுச்சேரி, ஆக. 25: லாஸ்பேட்டையில் உள்ள புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியில் இந்த கல்வி ஆண்டிற்கான இளங்கலை, முதுநிலை பட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஜூலை 25ம் தேதி முதல் ஆகஸ்ட் 24ம் தேதி வரை சமுதாயக் கல்லூரியின் இணைய தளமான *http://pucc.edu.in* மூலம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு வந்தன. விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசி தேதி முடிவடையும் நிலையில் பெரும்பாலான மாணவர்களின் கோரிக்கையை ஏற்று செப்டம்பர் 1ம் தேதி (வியாழன்) வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையின் கீழ் செயல்பட்டுவரும் லாஸ்பேட்டையில் உள்ள புதுவை பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லுரியில் இளங்கலை கணினி பயன்பாடுகள், வணிகவியல், வணிக நிர்வாகம். உயிர் வேதியியல், ஊடகவியல், உடற்கல்வியியல், இளங்கலை மருத்துவ தொழில் நுட்பப்படிப்புகளான இருதய பரிசோதனை தொழில்நுட்பம், கதிர்வீச்சு மற்றும் நிழற்பட தொழில் நுட்பம், கண் பார்வை தொடர்பான மருத்துவத் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சேவை தொழில்நுட்பம், கணினி மென்பொருள் மேம்பாட்டு தொழில்நுட்பம் போன்ற படிப்புகளும், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், மருத்துவமனை செவிலியர் சுகாதார ஆய்வாளர், நோய்த் தொற்று அறிவியல், பத்திர எழுத்தர், யோகா நாடகக் கலை, திரைப்பட நடிப்புக் கலை, இந்திய இசைக்கலை, கர்நாடக இசை (பாட்டு), பரத நாட்டியக்கலை, வரைகலை, ஓவியக்கலை, நுண்கலை மற்றும் நிகழ்த்துக்கலை ஆசிரியர் பயிற்சி, இந்தி, பிரெஞ்சு, சமஸ்கிருதம், ஆங்கிலம், ஜோதிடவியல், தோட்டக் கலை, ஆடை அலங்கார வடிவமைப்பு, இயற்கை அழகுசாதனக்கலை, உடற்பயிற்சி மேலாண்மை, ஆயுர்வேத உணவுகள் மற்றும் ஊட்டச் சத்து, இயற்கை மருத்துவம் மற்றும் யோக அறிவியல் போன்றவற்றில் ஒரு வருடப் பட்டயம் மற்றும் 6 மாதம் சான்றிதழ் படிப்புகளும் மிகச்சிறந்த அனுபவமிக்க கல்வியாளர்களால் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இளங்கலை பட்டப்படிப்புக்கள், பட்டயப்படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேர்வதற்கு 12ம் வகுப்பில் தேர்ச்சியும், முதுநிலை பட்டய படிப்புகளில் சேர்வதற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

இத்தகவலை புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி முதல்வர் லலிதா தெரிவித்துள்ளார்.

DINAMALAR

25 AUG 2022

PAGE 3

# பல்கலைக்கழக வளாகத்தில் ரீயூனியன் நினைவு சின்னம் புனரமைப்பு

புதுச்சேரி, ஆக. 25–

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள ரீயூனியன் நினைவுச் சின்னம் புனரமைக்கப்பட்டு, திறக்கப்பட்டது.



■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புனரமைக்கப்பட்ட ரீயூனியன் நினைவு சின்னத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்தியப் பெருங்கடலில் ஆப்பிரிக்க கண்டத்திற்கு கிழக்கே மடகாஸ்கருக்கும், மொரீஷியஸ் தீவுகளுக்கும் இடையில் உள்ள குட்டித் தீவு, ரீயூனியன். 1827ம் ஆண்டு புதுச்சேரி, பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்த போது, புதுச்சேரி, காரைக்கால், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகை ஆகிய பகுதிகளில் .இருந்து தமிழர்கள், ரீயூனியன் தீவிலுள்ள கரும்புத் தோட்டங்களில் பணியாற்றிட கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

புதுச்சேரியில் இருந்து ரீயூனியன் தீவுக்கு சென்ற தொழிலாளர்கள் நினைவாக, புதுச்சேரி பல்கலைக் கழக மரபு மற்றும் பண்பாட்டு கலையரங்கில் நினைவு சின்னம் கடந்த 2010ம் ஆண்டு எழுப்பப்பட்டது. நாளடைவில் கண்டுகொள்ளாமல் விட்டதால், பொலிவிழந்தது.

இது தொடர்பாக துணைவேந்தரின் கவனத்திற்கு கொண்டு சென்றதை தொடர்ந்து, நினைவு சின்னத்தை புனரமைக்க உத்தரவிட்டார்.

அதன்பேரில் ரீயூனியன் நினைவு சின்னம் புனரமைக்கப்பட்டு, திறக்கப்பட்டது. துணைவேந்தர் குர்மீத் சிங் திறந்து வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். பல்கலைக்கழக அதிகாரிகள், ரீயூனியனை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.